**தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்**
**பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.**
**தலைமை இடம் - சென்னை.**

**K.சந்திரசேகரன்**
**தலைவர்**

**R.சந்திரசேகரன்.**
**பொதுச்செயலாளர்**

**சுற்றறிக்கை / 17-2017** **25-09-2017**

அன்புடையீர்,

வணக்கம்.

மத்திய அரசின் 7-வது ஊதியக்குழு பரிந்துரைப்படி 1.1.2016 முதல் தமிழக அரசு ஊழியர்களுக்கும் புதிய சம்பளம் அமுல்படுத்திட வேண்டும்.(2) புதிய பங்களிப்பு ஓய்வூதியத்தை கைவிட்டு மீண்டும் பழைய ஓய்வூதியத்தை அமுல்படுத்திட வேண்டும்.

(3) இடைக்கால நிவாரணம் வழங்கிட வேண்டும்.(4) சத்துணவு, அங்கன்வாடி பணியாளர்களுக்கு, காலமுறை ஊதியம் (Time Scale) வழங்கிடவேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி 7.9.2017 முதல் அரசு ஊழியர்களின் ஒரு சில சங்கங்கள் காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டன. இதன் காரணமாக அரசுப்பணிகள் பாதிக்கப்பட்டன. ஆசிரியர்கள் பெருமளவில் பங்கேற்றதால் மாணவர்களும் பாதிக்கப்பட்டனர். இதன் மீது தொடரப்பட்ட வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் (மதுரை கிளை) அரசு ஊழியர் சங்கங்களின் காலவரையற்றப் போராட்டத்திற்கு தடை விதித்தது. ஆனாலும் கோர்ட் உத்திரவை மீறி ஏராளமான அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்தனர். இதனால் அரசு ஊழியர்கள் மீது கோர்ட் அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டது.15-ந் தேதி நடைபெற்ற விசாரணையில் சங்க நிர்வாகிகள் ஆஜராக உத்திரவிடப்பட்டது. விசாரணை முடிவில் சங்கங்கள் போராட்டத்தை தற்காலிகமாக வாபஸ் பெறுவதாக தெரிவித்தன.

இதையடுத்து அவர்கள் கோரிக்கைகள் தொடர்பாக விசாரிக்க தமிழக அரசின் தலைமைச்செயலாளரை நேரில் ஆஜராகுமாறு உத்திரவிடப்பட்டது. இருதரப்பினர் வாதங்களுக்குப்பின் நீதிமன்றம்

1)7-வது ஊதியக்குழு பரிந்துரைகளை அமுல்படுத்துவது தொடர்பான அறிக்கைகளை 30.09.2017-க்குள் அரசினர் தாக்கல் செய்ய வேண்டுமென்றும்,
2) அது எத்தனை நாட்களுக்குள் நிறைவேற்றப்படும் என்பதை 13.10.2017-க்குள் அரசு தெரிவிக்க வேண்டும் என்றும்,
3) இதில் காலதாமதம் ஏற்படுமானால் அரசு ஊழியர்களுக்கு இடைக்கால நிவாரணம் கொடுக்க வேண்டும்,
4) இவ்வழக்கில் மறு உத்திரவு பிறப்பிக்கும்வரை போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கக்கூடாது
5) சம்பளம் பிடித்தம் கூடாது, ஏற்கனவே பிடித்திருந்தால் திரும்ப வழங்க வேண்டும்,
6) போராட்ட நாட்களை சனிக்கிழமைகளில் பணியாற்றி ஈடுசெய்ய வேண்டும் என்று உத்திரவு பிறப்பித்து வழக்கினை 23.10.2017 அன்று தள்ளி வைத்தது.

அரசு ஊழியர்களின் வீரஞ்செறிந்த போராட்டத்திற்கு ஆதரவாக 12.9.2017 அன்று மின்வாரியத் தொழிற்சங்கங்கள் சார்பில் சென்னை தலைமையகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடை பெற்றது.

டான்ஜெட்கோவில் 3 ஆண்டுகளுக்கு மேல் ஒரே இடத்தில் தற்போது பணிபுரிந்து வரும் வணிகஉதவியாளர், வணிக ஆய்வாளர் மற்றும் ஆக்கமுகவர்களை வேறு இடங்களுக்கு மாற்றம் செய்திட 01.09.2017-ல் உத்திரவிடப்பட்டிருந்தது. இது சம்மந்தமாக 05.09.2017 அன்று மின்வாரியத்தின் பிரதான தொழிற்சங்கங்கள், மின்வாரியத்தலைவரை நேரில் சந்தித்து மேற்கண்ட

மாறுதல்களை நிறுத்தி வைக்குமாறும், தொழிற்சங்கங்களோடு கலந்து பேசி மாறுதல் பற்றி பின்னர் முடிவு செய்து கொள்ளலாம் என்ற முறையீட்டினை ஏற்றுக்கொண்டு அன்றைய தினமே மாறுதல் உத்திரவுகள் நிறுத்தி வைக்கப்பட்டது

ஆனால் மீண்டும் 10 நாட்களுக்குள் தலைமைப்பொறியாளரின் 13.09.2017 கடிதத்தில் ஒரே இடத்தில் 3 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றும் 2-ம் நிலை, 3-ம் நிலை மற்றும் களப்பணியாளர்களின் விவரங்கள் அவசரமாகக் கேட்கப்பட்டது.

எனவே இது சம்மந்தமாக நமது ஆட்சேபணையை தெரிவித்து உத்தேசிக்கப்பட்டுள்ள பணியிட மாறுதல்களை தவிர்க்குமாறு நிர்வாகத்திடம் முறையிட்டுள்ளோம். **(கடிதம் இணைக்கப்பட்டுள்ளது)**

மின்வாரியத் தொழிலாளர்கள் 1.12.2015 ஊதிய உயர்வு மற்றும் பணிப்பகிர்வு தொடர்பாக இதுவரை 4 சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுள்ளது. 3-வது சுற்றுப் பேச்சுவார்த்தையின் போது நிர்வாகம் தனது வேலைபளுவிற்கான முன்மொழிவை மட்டும் தந்தது. நிர்வாகத்திற்கும் பெரும்பான்மையான தொழிற்சங்கங்களுக்கும் ஒரு சரியான புரிதல் இருந்தபடியால் ஊதிய உயர்வுக்கான முன்மொழிவை சங்கங்கள் தரவில்லை. நிர்வாகமும் அதற்கான காரணத்தை அறிந்தே இருந்தது. ஆனால் தவறான புரிதலின் பேரில் ஒரு சிலர் நெருக்கடி கொடுத்ததால் வாரியம் M.F.2.37 என்றும் ஊதியஉயர்வு 5.3% குறைந்தபட்ச உயர்வு ரூ.760- என ஒரு மோசமான முன்மொழிவை 4-வது சுற்றுப்பேச்சு வார்த்தையின் போது கொடுத்து தனது கடமையை முடித்துக்கொண்டது.

இப்போது இவைகளை எதிர்கொள்ள வேண்டிய அவசியம் சங்கங்களுக்கு ஏற்பட்டுள்ளது. எனவே மத்திய அரசின் 7-வது ஊதிய பரிந்துரையினை ஒட்டித்தான் தமிழக அரசு ஊழியர்களின் ஊதிய உயர்வு முடிவு செய்யப்படும் என்ற அநுமானத்தின் பேரிலும், கடந்த கால நடைமுறை இதுதான் என்பதாலும், மின்சாரத்தொழிலாளர்களுக்கான ஊதியஉயர்வு முன்மொழிவினை மத்திய அரசின் 7-வது ஊதிய பரிந்துரையின் அடிப்படையில் 25.9.2017 அன்று நமது சங்கம் கொடுத்துள்ளது. **(இணைக்கப்பட்டுள்ளது)**

அதே போல சங்கத்தின் துணைக்குழுக்கள் ஏற்கனவே வழங்கியுள்ள சிபாரிசுகளின் அடிப்படையில் களப்பிரிவு, வருவாய்ப்பிரிவு, அட்டைப்பட்டியல், மத்திய அலுவலக நிர்வாகப்பிரிவு, செலவினப்பிரிவு, அனல், புனல், ஜி.சி.சி. மற்றும் தலைமை நிதிக்கட்டுப்பாட்டு அலுவலகங்களுக்கான பணிப்பகிர்வு மற்றும் பணியாளர் எண்ணிக்கைக்கான முன்மொழிவை கொடுத்துள்ளோம். **(இணைக்கப்பட்டுள்ளது)**

எதிர்வரும் 27.9.2017 அன்று போனஸ் பேச்சு வார்த்தை தொழிற் சங்கங்களுடன் நடைபெறவுள்ளது. இது ஒரு சம்பிரதாயப் பேச்சு வார்த்தைதான். பொதுத்துறை நிறுவனங்களுக்கான போனஸ் சென்ற ஆண்டைப்போலவே, இந்த ஆண்டும் வழங்கிடவேண்டும் என்று 19.09.2017 அன்று அரசாணை வெளியிட்டுவிட்டதால் தமிழக மின்சாரத் தொழிலாளர்களுக்கும் கடந்த ஆண்டைப் போலவே

| | |
|---|---|
| குறைந்த பட்ச போனஸ் | 8.33% |
| எக்ஸ்கிரேஸியா | 11.67% |
| ஆக மொத்தம் | 20% |

அனைத்துத் தொழிலாளர்களுக்கும் சம்பளஉச்சவரம்பின்றி வழங்கப்படும்.

போனஸ் கணக்கிட மாத சம்பளம் ரூ. 7000-
பெறும் போனஸ் தொகை ரூ.16,800-

இதில் மாற்றம் ஏதும் இருக்காது என்றும், போனஸ் வழங்கும் தேதிதான் முடிவு செய்ய வேண்டியிருக்கும் என்றும் கருதுகிறோம்.

உறுப்பினர்கள் பெறுகின்ற போனஸ் தொகையில் ரூ.200- நன்கொடையாக வசூலித்து மத்திய சங்கத்திற்கு ரூ.100-ம் வட்டத்திற்கு ரூ.50-ம் அனுப்பிவிட்டு, மீதம் ரூ.50-ஐ கிளைகளுக்கு வைத்துக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

10.06.2017 அன்று நடை பெற்ற 180-வது மாநிலச்செயற்குழு தீர்மானம் 9-ன்படி சங்கத்துணைவிதித் திருத்தங்கள் கிளைகளுக்கு அனுப்பி கருத்துக்களை கேட்டிருந்தோம். இத்துணைவிதித் திருத்தங்களுக்கு முதலில் ஒரு பொதுக்குழுவில் ஒப்புதல் பெற்ற பிறகுதான் அடுத்த ஆண்டிற்கான பொறுப்பாளர்கள் தேர்தல் நடத்திட முடியும் என்று சுற்றறிக்கை எண்.11-2017 நாள்.17.7.2017-ல் தெரிவித்திருந்தோம்.

ஆனால் 20.8.2017 அன்று நடைபெற்ற சங்கத்தின் உயர்மட்டக்குழு, அதன்பின் தலைவர், பொதுச்செயலாளர், நிதிச்செயலாளர் மற்றும் சில மூத்தப் பொறுப்பாளர்களுடன் நடைபெற்ற ஆலோசனை ஆகியவற்றின் பேரில் மேற்கண்ட துணைவிதித் திருத்தங்கள் ஒப்புதல் பெறுவதற்காக தனியாக டிசம்பர் திங்களில் ஒரு பொதுக்குழுவும், அதன்பின் திருத்தப்பட்ட விதிகளின் படி தேர்தல் நடத்திட ஜூன் மாதத்திற்குள் இன்னொரு பொதுக்குழுவும் நடத்தினால் 6 திங்களுக்குள் 2 பொதுக்குழுக்கள் நடத்திடவும், அவைகளுக்கு மாநில முழுமையிலிருந்து கிளைச்செயலாளர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் கலந்து கொள்வதற்கும் மிகுந்த சிரமம் ஏற்படுமென்று கருதப்பட்டது. அதேபோல மேற்கொள்ளப்படவிருக்கும் திருத்தங்களும் உடனடியாக அமுலுக்கு கொண்டு வந்து அதன்படி பொறுப்பாளர்கள் தேர்வு நடத்தும் அளவிற்கு முக்கியமானவை அல்ல என்று கருதியதாலும், இதனை மறுபரிசீலனை செய்து, தேவைப்படும் திருத்தங்களை அடுத்த தேர்தல் பொதுக்குழுவில் ஒப்புதல் பெறுவது சாத்தியமாக இருக்கும் என்று கருதப்பட்டது.

எனவே மேற்குறிப்பிட்ட கருத்துக்களுக்கு ஒப்புதல் பெற்றிட அடுத்த மாநிலச் செயற்குழு சென்னையில் டிசம்பர் திங்களில் கூட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தோழமையுள்ள

(கையொப்பம்)

பொதுச்செயலாளர்

பெறுநர்.
கிளைச்செயலாளர்கள், கோட்டச்செயலாளர்கள்,
வட்டச்செயலாளர்கள்,
வட்டத்தலைவர்கள்,
மண்டலச்செயலாளர்கள், மற்றும்
மத்திய சங்கப்பொறுப்பாளர்கள்.
நகல் : செய்தி மடல்.

மத்தியச்சங்கத்திலிருந்து அனுப்பப்படும் சுற்றறிக்கைகளை "உதவிக்கோட்டச் செயலாளர்களுக்கும் அனுப்பிட வேண்டும்" என்ற கோரிக்கைகள் வந்துள்ளது. உதவிக்கோட்டச் செயலாளர்களின் அஞ்சல் முகவரி மத்திய சங்கத்திற்கு முழுமையாக அனுப்பப்படாததால் மத்தியச்சங்கத்திலிருந்து உதவிக்கோட்டச் செயலாளர்களுக்கு சுற்றறிக்கைகளை அனுப்பிட இயலாத நிலை உள்ளது. எனவே வட்டச்செயலாளர்கள் அவர்கள் வட்டத்திற்குட்பட்ட உதவிக்கோட்டச் செயலாளர்களுக்கு தேவையான எண்ணிக்கையில் நகல் எடுத்து மத்தியசங்க சுற்றறிக்கைகளை விநியோகித்திட வேண்டுகிறோம்.

தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்
பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.
தலைமை இடம் - சென்னை.

**K.சந்திரசேகரன்**
**தலைவர்**

**R.சந்திரசேகரன்.**
**பொதுச்செயலாளர்**

பெறுநர்.
18.09.2017

தலைமைப்பொறியாளர் / பணியமைப்பு,
டான்ஜெட்கோ,
சென்னை – 600 002.

ஐயா,

பொருள் டான்ஜெட்கோ – 3 ஆண்டுகளுக்கு மேல் ஒரே இடத்தில் பணி புரியும் பணியாளர்களின் பட்டியல் கேட்பது சம்மந்தமாக.

பார்வை
1 DGP/Vigilance review meeting dt.26.7.2017.
2 DGP/Vigilance Memo (Per) No.13529/B10/ B101/2017-4 Dt.30.08.2017. Enclosing the Instructions of CMD/Tangedco.
3 Chief Engineer/D/Villupuram Region Memo No.699 /Ad,.A /A.2 /.RWE/2017 Dt.01.09.2017
4 DGP/Vigilance Memo No.13529/B10/ B101/2017-5 Dt.05.09.2017.
5 DGP/Vigilance Memo No.13529/B10/ B101/2017-8 Dt.08.09.2017.
6 CEP.Letter NO. 077827/1198/G15/G151/2017, dt.13-09-2017

*********

டான்ஜெட்கோவில் 3 ஆண்டுகளுக்கு மேல் ஒரே இடத்தில் தற்போது பணிபுரிந்து வரும் வணிகஉதவியாளர், வணிக ஆய்வாளர் மற்றும் ஆக்கமுகவர்களை வேறு இடங்களுக்கு மாற்றம் செய்திட பார்வையில் காணப்படும் 1 முதல் 4 வரையான குறிப்பாணைகளில் உத்திரவிடப்பட்டிருந்தது.

இது சம்மந்தமாக 05.09.2017 அன்று மின்வாரியத்தின் பிரதான தொழிற்சங்கங்கள், மின்வாரியத்தலைவரை நேரில் சந்தித்து மேற்கண்ட மாறுதல்களை நிறுத்தி வைக்குமாறும், தொழிற்சங்கங்களோடு கலந்து பேசி மாறுதல் பற்றி பின்னர் முடிவு செய்து கொள்ளலாம் என்ற முறையீட்டினை ஏற்றுக்கொண்டு அன்றைய தினமே பார்வை 5-ல் காணப்படும் குறிப்பாணையின் வாயிலாக மாறுதல் உத்திரவுகள் நிறுத்தி வைக்கப்பட்டதை அறிந்து மகிழ்ச்சியடைந்தோம்.

ஆனால் மீண்டும் 10 நாட்களுக்குள் தலைமைப்பொறியாளரின் 13.09.2017 கடிதத்தில் ஒரே இடத்தில் 3 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றும் 2-ம் நிலை, 3-ம் நிலை மற்றும் களப்பணியாளர்களின் விவரத்தினை அவசரமாகக் கேட்டிருப்பது தங்களை இடம் மாற்றம் செய்வதற்காகத்தான் என்று தொழிலாளர்கள் மத்தியில் அச்சத்தையும், பதற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

மின்சாரவாரியத்தில் அனுமதிக்கப்பட்ட சுமார் 1,32,000 பொறுப்புகளில் 90,000 பொறுப்புகள் மட்டுமே நிரப்பப்பட்டுள்ளது. மீதம் சுமார் 42,000 பொறுப்புக்கள் காலியாகவே வைக்கப்பட்டுள்ளது. காலிபொறுப்புக்களையும், இருக்கின்ற பணியாளர்களை வைத்தே சாமாளிக்கப்பட்டு வருகிறது.

ஒரு சில பிரிவுகளில் அனுமதிக்கப்பட்ட பொறுப்புகள் போதுமானவையாக இல்லாததால், இதர பிரிவுகளிலிருந்து பணியாளர்கள் டைவர்ஸன் செய்யப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டு வருகின்றன.

மேற்கண்ட சூழ்நிலைகளில், 3 ஆண்டுகள் பணிமுடித்துவிட்டார்கள் என்பதற்காக மிச்சம் மீதி இருக்கும் பணியாளர்களை மாற்றினால் நிர்வாகப்பணிகள் வெகுவாகப் பாதிக்கும் என்று அஞ்சுகிறோம்.

மேலும், தற்போது கல்வி ஆண்டு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்த இடைப்பட்டக் காலத்தில் பணியாளர்களை மாற்றினால் அவர்கள் மட்டுமல்ல, பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் அவர்களது பிள்ளைகளும் பாதிப்பார்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக மின்வாரியத் தொழிலாளர்களின் 01.12.2015 முதல் அமுலுக்கு வரவேண்டிய ஊதிய உயர்வுக்கான பேச்சு வார்த்தை மும்முரமாக நடை பெற்று வருகிறது. பேச்சுவார்த்தை சுமூகமாக முடிவுற நிறுவனத்தில் அமைதியான சூழ்நிலை நிலவ வேண்டும். சுமூகப்பேச்சுவார்த்தையை பாதிக்கின்ற வகையில் இருதரப்பினரும் ஈடுபடக்கூடாது. இது தொழில் உறவின் மாண்பாகும்.

3 ஆண்டுகளுக்கு மேல் ஒரே இடத்தில் பணியாற்றுகின்றவர்களை அதிரடியாக, பெருந்திரளாக மாற்றம் செய்வது, தொழிலாளர்கள் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்தும். தொழில் அமைதியை பாதிக்கும். சுமூக ஊதிய உயர்வு பேச்சு வார்த்தைக்கு குந்தகம் விளைவிக்கும் என்று நாங்கள் அஞ்சுவதால் உத்தேசிக்கப்பட்டுள்ள பணியிட மாறுதல்களை தவிர்த்திடுமாறும், பிரச்சினை குறித்து சங்கங்களுடன் பேசி தீர்வு காணுமாறும் வேண்டுகிறோம்.

தங்கள் உண்மையுள்ள

பொதுச்செயலாளர்

**தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்**
**பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.**
**தலைமை இடம் - சென்னை.**

**K.சந்திரசேகரன்**
**தலைவர்**

**R.சந்திரசேகரன்.**
**பொதுச்செயலாளர்**

பெறுநர்.
இயக்குநர் நிதி,
தலைவர், ஊதிய உயர்வு பேச்சுவார்த்தைக்குழு,
டான்ஜெட்கோ,
சென்னை – 600 002.

23.09.2017

ஐயா,

பொருள் : டான்ஜெட்கோ – 1.12.2015 முதல் அமுலுக்கு வர வேண்டிய ஊதிய உயர்வு மற்றும் வேலைபளு திருத்தம் குறித்த சங்கத்தின் முன் மொழிவு– சமர்ப்பிக்கப்படுகிறது.

பார்வை : 6.9.2017 அன்று தங்கள் முன்னிலையில் நடைபெற்ற 4-வது சுற்றுப் பேச்சு வார்த்தை.

மேற்கண்ட பேச்சு வார்த்தையின் போது தாங்கள் ஏற்கனவே நிர்வாகம் கொடுத்த வேலைபளு முன்மொழிவின் மீது எங்கள் சங்கத்தின் பிரதிபலிப்பினை தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

வேலைபளு சம்மந்தமாக, நிர்வாகத்துடன் பேச்சுவார்த்தை நடத்திட எங்களது சங்கத்தால் நியமிக்கப்பட்ட குழுக்கள், கீழ்கண்ட பிரிவுகளுக்கான பணிப்பகிர்வு மற்றும் பணியாளர்கள் எண்ணிக்கை குறித்து பரிந்துரைகளை வழங்கியுள்ளது.

1. களப்பிரிவு
2. வருவாய்ப் பிரிவு.
3. அட்டைப்பட்டியல் பிரிவு.
4. நிர்வாகப்பிரிவு.
5. செலவினப்பிரிவு.
6. அனல், புனல் மின்உற்பத்தி வட்டங்கள், G.C.C மத்திய அலுவலகங்கள்.

மேற்கண்ட பரிந்துரைகளை அப்படியே எங்கள் சங்கத்தின் வேலைபளுவிற்கான முன்மொழிவாக சமர்ப்பிக்கின்றோம்.

பண்டகப்பிரிவிற்கான முன்மொழிவு பின்னர் சமர்ப்பிக்கின்றோம்.

அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் போது மேற்கண்ட முன்மொழிவின் மீது கருத்துப்பரிமாற்றம் செய்து ஒப்பந்தம் மேற்கொள்ள தங்களின் ஒத்துழைப்பை நாடுகிறோம்.

தங்கள் உண்மையுள்ள

பொதுச்செயலாளர்

இணைப்பு : மேற்கண்ட 6 இணைப்புகள்.

குறிப்பு : வேலைபளு துணைக்குழுக்களின் பரிந்துரைகள் ஏற்கனவே செய்திமடலில் பிரசுரிக்குப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்**
**பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.**
**தலைமை இடம் - சென்னை.**

**K.சந்திரசேகரன்**
**தலைவர்**

**R.சந்திரசேகரன்.**
**பொதுச்செயலாளர்**

23.09.2017

பெறுநர்.
இயக்குநர் நிதி,
தலைவர்,
ஊதிய உயர்வு பேச்சுவார்த்தைக்குழு,
டான்ஜெட்கோ,
சென்னை – 600 002.

ஐயா,

பொருள் : டான்ஜெட்கோ – தொழிலாளர் மற்றும் அலுவலர்களுக்கு 01.12.2015 முதல் ஊதிய உயர்வுக்கான சங்கத்தின் முன்மொழிவு சமர்ப்பிக்கப்படுகிறது.

பார்வை : 06.09.2017 அன்று தங்கள் முன்னிலையில் நடைபெற்ற 4-வது சுற்றுப் பேச்சுவார்த்தை.

********

06.09.2017 அன்று தங்கள் முன்னிலையில் நடைபெற்ற 4-வது சுற்றுப் பேச்சு வார்த்தையின் போது டான்ஜெட்கோ தொழிலாளர் மற்றும் அலுவலர்களுக்கு 01.12.2015 முதல் ஊதிய உயர்வுக்கான நிர்வாகத்தின் முதல் முன்மொழிவு கொடுக்கப்பட்டதற்கு எங்களது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தங்களது முன்மொழிவில் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. ஏற்கனவே 1.1.2016-ல் பெற்று வந்த ஊதியம் மற்றும் தர ஊதியத்தை 2.37 காரணியால் பெருக்கி புதிய ஊதிய விகிதப் பட்டியல்படி வழங்கப்படும்.
2. குறைந்த பட்ச ஊதிய உயர்வு ரூ.760- உறுதி செய்யப்படும்.
3. ஏற்கனவே 1.1.2016-ல் பெற்று வந்த ஊதியம் மற்றும் தர ஊதியத்துடன் 125 சதவிகிதம் அகவிலைப்படியைச் சேர்த்து, பின்னர் புதிய ஊதியம் பொருத்தப்படும்.
4. ஏற்கனவே பெற்று வந்த தனி ஊதியத்தை கணக்கிலெடுத்து புதிய ஊதியம் பொருத்தப்படும்.
5. 125% அகவிலைப்படி அடிப்படை சம்பளத்துடன் சேர்க்கப்பட்டுவிட்டதால் 1..1.2016 முதல் அகவிலைப்படி 0% என்று கணக்கிடப்படும்.
6. புதிய ஊதிய விகிதத்தில், அகவிலைப்படி மாநில அரசு அதன் ஊழியர்களுக்கு வழங்கப்படும் தேதியில், விகிதத்தில் மின்சாரத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும்.
7. வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி, சிறப்பு ஊதியங்கள் மற்றும் இதர படிகள் மாநில அரசு மாற்றுகின்ற வகையில் அப்படியே தொடரும்.

மேற்கண்ட முன்மொழிவில் வரிசைஎண் 3 முதல் 7 வரை கூறப்பட்டுள்ளவைகளை அப்படியே நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். வரிசை எண் 1 மற்றும் 2-ல் கூறப்பட்டுள்ளவைகள் நியாயமற்றவை என்பதால் அவைகளை நாங்கள் ஏற்றுக்கொள்ள இயலாது என்பதை தெரிவித்துக்கொள்கிறோம். இதற்கு மாற்றாக எங்களது சங்கத்தின் முன்மொழிவினை கீழ்கண்டவாறு சமர்ப்பிக்கின்றோம்.

1. 1.1.2016-ல் பெற்ற ஊதியத்தை 2.57- என்ற காரணியால் பெருக்கி அதேநிலையில் /அடுத்த நிலையில் புதிய ஊதிய விகிதப்பட்டியல்படி வழங்கிட வேண்டும்.
2. தேசிய குறைந்த பட்ச ஊதியம் ரூ.18,000/– (மஸ்தூர் உட்பட) நிர்ணயிக்க வேண்டும்.
3. ஓய்வூதியர்களுக்கும் 1.1.2016-ல் பெற்ற ஓய்வூதியத்தை 2.57 காரணியால் பெருக்கி புதிய ஓய்வூதியம் வழங்கிட வேண்டும். பணிக்கொடை 1.1.2016 முதல் அதிக பட்சமாக ரூ.20 லட்சமாக நிர்ணயம் செய்திட வேண்டும்.
4. வழக்கம்போல பணிக்கால ஆண்டுயர்வு (Service Weightage) வழங்கிட வேண்டும்.
5. ஸ்பெஷல் கிரேடு பெறாமல் JE II–ம் நிலை பதவி உயர்வு பெற்ற சீனியர்கள், ஸ்பெஷல் கிரேடு பதவி உயர்வு பெற்று பின்னர் JE II–ஆக பதவி உயர்வு பெறும் ஜூனியர்களைவிட சம்பளம் குறைவாகப் பெறுவதை சரிசெய்தல்,

6. அனைத்துப்பிரிவுகளிலும், குறிப்பாக அட்டைப்பட்டியல் பிரிவில் ஓய்வு பெறுமுன் பணிக்காலத்தில் **3-வது பதவி உயர்வை** உறுதிபடுத்திட வேண்டும்.
7. 1.12.2015 முதல் 31.12.215 வரையான காலத்திற்கு இழப்பீடு வழங்கிட வேண்டும்.
8. இடைப்பட்ட காலத்தில் ஓய்வு பெற்றவர்களுக்கும் 1.1.2016 ஊதிய உயர்வுப்பலன் வழங்கிட வேண்டும்.
9. இந்த ஒப்பந்தம் 4 ஆண்டுகள் வரை அமுலில் இருக்கும்.
10. இடைப்பட்டக்காலத்தில் தமிழக அரசு ஊழியர்களுக்கு இடைக்கால நிவாரணம் வழங்கப்படும் எனில் அதன்படி மின்சாரத் தொழிலாளர்களுக்கும் வழங்கிட வேண்டும்.

மின்சாரவாரியத்தில் இதற்கு முன்பு மத்திய அரசின் 5-வது ஊதியக்குழு பரிந்துரைப்படி மாநில அரசு ஊழியர்களுக்கு 1.1.1996 முதல் வழங்கப்பட்ட ஊதிய உயர்வைவிட கூடுதலாக 1.12.1996 முதல் மின்சாரத் தொழிலாளர்களுக்கும், அலுவலர்களுக்கும் ஊதியம் வழங்கப்பட்டது.

அதே போல் மத்திய அரசின் 6-வது ஊதியக்குழு பரிந்துரைப்படி மாநில அரசு ஊழியர்களுக்கு 1.1.2006 முதல் வழங்கப்பட்ட ஊதிய உயர்வைவிட கூடுதலாக 1.12.2007 முதல் மின்சாரத் தொழிலாளர்களுக்கும் அலுவலர்களுக்கும் ஊதியம் வழங்கப்பட்டது.

அரசு ஊழியர்களைப்போலவே 1.12.96-ல் 40 சதவிகித ஊதியஉயர்வும், 1.12.2007-ல் புதிதாக தர ஊதியம் என்ற பெயரில் 40 சதவிகித உயர்வும் மின்வாரியத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டது,

அரசு ஊழியர்களுக்கு இணையாக அகவிலைப்படி மின்சாரத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகிறது. அவ்வப்போது அகவிலைப்படியில் அரசு ஊழியர்களுக்கு செய்யப்படும் மாற்றங்கள் மின்சாரத் தொழிலாளர்களுக்கும் செய்யப் படுகின்றன. தற்போது தாங்கள் கொடுத்த முன்மொழிவில் கூட 1.1.2016 முதல் மத்திய அரசு ஊழியர்களைப் போலவே 125% அகவிலைப்படி இணைக்கப்படும் என்றும், பின்னர் அகவிலைப்படியில் அரசு ஊழியர்களுக்கு செய்யப்படும் மாற்றங்கள் மின்சாரத் தொழிலாளர்களுக்கும் செய்யப்படும் என்றும் கூறப்பட்டுள்ளதை தங்களுக்கு சுட்டிக்காட்டிட விரும்புகிறோம்.

மேலும் மின்வாரிய ஓய்வூதியர்களைப் பொறுத்த அளவில் தமிழக அரசு ஓய்வூதிய விதிகளைப் பின்பற்றுவது வாடிக்கை என்பதால் அவர்களுக்கும் 1.1.2016 முதல் அவர்களது 125% அகவிலைப்படியை இணைக்கவும், அடிப்படை ஓய்வு ஊதியத்தை விட 2.57 மடங்கு ஓய்வூதியம் வழங்கிடவும் வேண்டுகிறோம்.

இது குறித்து தேவைப்படும் விளக்கங்களை அடுத்த சுற்றுப் பேச்சு வார்த்தையின் போது நேரிடையாகத் தெரிவிக்கின்றோம்.

தேவைப்பட்டால் இந்த முன்மொழிவில் திருத்தங்கள், மாற்றங்கள் செய்து பின்னர் தரப்படும்.

தங்கள் உண்மையுள்ள

பொதுச்செயலாளர்